தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 23, வியாழக்கிழமை.

சித்திரை 10, பிரபவ — திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''.

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தில் பேருந்து நிலையம்

380—(*வினா எண் 8156) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரமங்கலம் பேரூராட்சியானது கிட்டத்தட்ட 30,000 மக்கள் வசிக்கக்கூடிய மையப் பகுதியாக இருப்பதால், கீர மங்கலத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான நிலமும் கையகப் படுத்தப்பட்டு, அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கீர மங்கலத்தை டவுனாக அறிவிக்கக்கூடிய அந்தஸ்து இல்லையென்ற ஒரே ஒரு காரணத்திற்காக, நம்முடைய அரசு அதை இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, நிலமும் கையகப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தாலும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிற காரணத்தாலும் நம்முடைய அரசு கீர மங்கலம் பேரூராட்சியை டவுன் அந்தஸ்துக்கு உயர்த்தி, பேருந்து நிலையம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுமார் ரூ. 1.40 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் கட்ட 27-10-1986 அன்று தீர்மானித்திருக்கின்றனர். அரசிடம் அந்த நிதியைக் கடனாக அவர்கள் கோரவிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து இதுவரையில் எந்தத் தகவலும் வரவில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சி மன்றத்திடமிருந்து அதற்குரிய பரிந்துரையும், அதற்குரிய தீர்மானமும் அனுப்பப்பட்டதற்குப் பிறகாவது இந்தக் கீரமங்கலம் பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அனுப்பப்பட்டபிறகு ஆய்ந்து அரசு முடிவெடுக்கும்.

ஆற்காடு ஒன்றியம், மேலகுப்பம் மற்றும் குக்குண்டி பஞ்சாயத்துக்களைப் பிரித்தல்

*381—(*வினா எண் 8862)*—திரு. த. பழனி; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு ஒன்றியம், மேலகுப்பம், குக்குண்டி ஆகிய பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.